# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 03 திங்கட்கிழமை (16.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 140


# சமரச முயற்சிகளை வற்புறுத்தாமல் விட்டுப் பிடிக்க சர்வதேச சமூகம் முடிவு

## அரசும் புலிகளும் பட்டுத் தெளிய அனுமதிக்கலாம் எனத் தீர்மானம்

கொழும்பு,ஏப்ரல்16

சமாதானத் தீர்வுக்கான அமைதி முயற்சிகளில் அதிக முனைப்புடன் ஈடுபடுமாறு இலங்கை அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் விடாது நச்சரித்து வந்த சர்வதேச சமூகம், அக்கோரிக்கை இரு தரப்புகளினதும் காதுகளில் ஏறாது என்பதைக் கண்டுணர்ந்த நிலையில், மேலும் அந்த வற்புறுத்தலைத் தொடர்வது இல்லை என்ற முடிவுக்கு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

யுத்த முனைப்பில் தீவிரமாக இருக்கும் இரு தரப்புகளையும் மோதவிட்டு, அவை பட்டுத் தெளிந்து, மோதிக் களைத்து வரும் வரை விட்டுப்பிடிப்பது என இராஜதந்திர வட்டாரங்கள் முடிவு செய்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி.செய்தி நிறுவனம் இதனை வெளியிட்டிருக்கின்றது. அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்ட தகவல்கள் வருமாறு:-

அரசு, புலிகள் இரு தரப்புமே இராணுவத்தீர்வில் உறுதி கொண்டு செயற்படுவதால் அமைதி முயற்சிகள் மேலும் நாசமடையும் என இந்தப் பிணக்கை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டு தரப்புகளுமே இரத்தக் களரியில் சிக்கி, பேரிழப்புகளைச் சந்தித்து, களைத்த பின்னரே பேச்சுக்குறித்துப் பேச

(04ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு மலையக மாணவரை அனுப்பவேண்டாம்

### பிரதிக் கல்வியமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஏப்.16

வடக்கு மற்றும் கிழக்கில் போர்ச் சூழல் நிலவுவதால் மலையக மாணவர்களை அந்தப் பிரதேசத்தில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கவேண்டாம் எனக் கோரப்பட்டுள்ளது.

பிரதிக் கல்வியமைச்சர் எம்.சச்சிதானந்தன் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாணவர்களை வடக்கு , கிழக்குத் தவிர்ந்த பிற மாவட்ட பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும்படி யும் அவர் கோரியுள்ளார்.

இது குறித்து உயர் கல்விக்கான பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவிடம் கேட்ட போது , வடக்கு, கிழக்கு பல்கலைக்கழங்களுக்குச் சென்று படிப்பதற்குத் தமது பிள்ளைகளை அனுப்ப பல பெற்றோர்கள் தயங்குவதாகக் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்களுக்குள் படைகளைக் குவிக்க முடியாது. இது தொடர்பான இறுதி முடிவை அரசுதான் எடுக்க வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-1)

## அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.16

நாட்டில் தற்போது இடம்பெற்று வருகின்ற யுத்தம், கொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம்கோரல், கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், விலைவாசி அதிகரிப்பு மற்றும் அரசில் இடம்பெறுகின்றன என்று கூறப்படுகின்ற ஊழல் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு எதிராக, பெரிய அளவிலான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த ஐக்கியதேசியக்கட்சி முடிவு செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசியல்குழு கடந்த வாரம் கொழும்பு கேம்பிரிஜ் டெரேஸில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் அலுவலகத்தில் கடந்த வாரம் கூடி ஆராய்ந்து இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தக்கூட்டத்தில் கட்சியின் அரசியல் குழுவைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டு தற்போதைய நாட்டுநிலைமை தொடர்பாக பல்வேறு வகையான கருத்துகளையும், யோசனைகளையும் முன்வைத்தனர் என்று கூறப்பட்டது.

இதன்படி மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நாட்டில் உள்ள பிரதான நகரங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்களையும்

(04ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதை வெளிநாடுகள் பல மீள்பரிசீலனை செய்யும்?

ஜெனிவா, ஏப்.16

தத்தமது நாடுகளில் தற்காலிகமாக அகதி அந்தஸ்த்துடன் வாழும் இலங்கையரைத் திருப்பி அனுப்புவதை மீள் பரிசீலனை செய்யவும், இப்போதைக்குத் தற்காலிகமாக நிறுத்தவும் ஐரோப்பிய நாடுகள் சில உத்தேசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற்போதல் ஆகிய மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்து வருவதால், அகதி அந்தஸ்து கோரிய நிலையில் தத்தமது நாடுகளில் தற்காலிகமாக வாழ்ந்து வருவோரை, அங்கிருந்து திருப்பி அனுப்பும் திட்டத்தை மேற்கு நாடுகளின் அரசுகள் மறுபரிசீலனை செய்து விரைவில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது விடயத்தில்சுவிற்ஸர்லாந்து ஏனைய

(04ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதிகளுக்கு உதவவிடாமல் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நெருக்கடி!

### நிலைமையை விளக்கி அந்த அமைப்பு அறிக்கை

கொழும்பு,ஏப்.16

கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பெருமளவு துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனினும், அந்த அகதிகளுக்கு உதவவிடாமல் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்துக்கு அரசு பாரிய நெருக்கடிகளைக் கொடுத்துவருகின்றது என்று அந்த அமைப்பு குற்றஞ் சாட்டியிருக்கிறது. இதுதொடர்பாக நிலைமைகளை விளக்கி - அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்னைய சேவைகளான, போர்கள் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த இடப்பெயர்வுக் காலப் பணிகளுடன் ஒப்பிடும்போது கிழக்கில் இடம்பெயர்ந்து வாழும் 150,000 மக்களைப் பராமரிப்பது ஒரு பெரிய சவாலாக இருக்கமாட்டாது.

சிறிலங்கா அரசினால் எமது வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதுடன், எழுதப்படாத பொருளாதாரத் தடைகள், ஏனைய கட்டுப்பாடுகள் என்பன எமது

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் குழு விரைவில் வன்னி செல்லும்!

கொழும்பு,ஏப்.16

வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று வன்னி செல்லத் திட்டமிட்டுள்ளது. இந்த வாரத்தில் இந்த விஜயத்தை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இக்குழுவைப் பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்த விஜயத்தை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விஜயத்திற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் மன்னார் மற்றும் வவுனியா

(04ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கத்தின் சாரதி விசாரணையில்

கொழும்பு, ஏப்.16

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வாகனச்சாரதி பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற சிவாஜிலிங்கம் வாகனம் ஒன்றைக் கையளித்த விவகாரம் தொடர்பாக நடத்தப்பட்டுவரும் விசாரணைகளின் ஒரு பகுதியாக அவரது சாரதியும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட சாரதியே வாகனத்தை எடுத்துச் சென்று வன்னியில் ஒப்படைத்ததாகச் சந்தேகிக்கும் புலனாய்வுப் பிரிவினர் அவரை விசாரணை செய்துள்ளனர்.

இதற்கு முன் நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்ப்பாதுகாவலர்களும் விசாரணை செய்யப்பட்டிருந்தனர்.

(அ-1)

## இலங்கை மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக்குழு அமைக்க அமெரிக்கா ஆதரவு

கொழும்பு,ஏப்.16

'சிறிலங்காவின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் கவலையை தருகின்றன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு, தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதனை அமெரிக்க ஊக்கப்படுத்துகின்றது. மனித உரிமை மீறல்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளுக்கு சர்வதேச விசாரணை ஆணைக்குழுவை அமைப்பதற்கு அமெரிக்காதனது ஆதரவை வழங்கும்.'

அமெரிக்காவின் வாஷிங்டனில் அனைத்துலக ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போது அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்திய வெளிவிவகார துணை அமைச்சக தூதுவர் ரிச்சர்ட் பௌச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சிறிலங்கா அரசு, தீவிரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டவியல் அதிகாரிகள் இதுதொடர்பாக கவனமான நடவடிக்கைகளை எடுப்பதை அரசு உறுதி செய்யவேண்டும்.

சிறிலங்காவில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், விடுதலைப் புலி ளால் மேற்கொள்ளப்படும் சிறார் படைச் சேர்ப்பு, பொதுமக்களின் பேருந்துகள் மீதான குண்டுத் தாக்குதல் என்பன கவலை தருகின்றன.

இங்கே, நாங்கள் இரு காரணிகளை பார்க்கவேண்டும்எனநான்நினைக்கின்றேன்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு...?

கொழும்பு, ஏப்.16

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்ற உறுப்பினராக்கப்படலாம் என்று கொழும்பில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் கே.எஸ்.சொக்ஸி தமது பதவியை ராஜினாமாச் செய்வார் என்றும் அந்த இடத்திற்கு சந்திரிகாவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கட்சி வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

விரைவில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படலாம் என்ற அரசியல் ஆருடங்களுக்கு வலுச் சேர்ப்பதாக சந்திரிகாவை எம்.பி. ஆக்கும் விடயமும் சேர்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், சந்திரிகாவை நாடாளுமன்ற உறுப்பினராக்கும் முயற்சிகள் நடைபெறுவது குறித்துப் பிரஸ்தாபித்தார் என்று சொல்லப்படுகின்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குட்டித்தம்பி திருநாவுக்கரசுநாயகம்

(உரிமையாளர், நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி திருநாவுக்கரசுநாயகம் நேற்று (15.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - தில்லையம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் ரதிமாலா (கனடா), பவானி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரட்ணம் (கனடா), உதயகுமார் (உரிமையாளர், லா பான்சி, மானிப்பாய்) ஆகியோரின் மாமனாரும் பார்வதிபிள்ளை (கனடா), பாலச்சந்திரன், பேரம்பலம் ஆகியோரின் சகோதரரும் நிமல்ராஜ் (கனடா), வினித்தா (கனடா), பிரசன்னா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய். (சி/52261)

தகவல்:
மனைவி, மகள்.

## திருமதி பூம்பாவை குழந்தைவேலு



வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் 47, அரசடி வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூம்பாவை குழந்தைவேலு 14.04.2007 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நயினாதீவு-5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலாங்கொடை வர்த்தகர் கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குழந்தைவேலு (உரிமையாளர் - கந்தையா ஸ்ரோர்ஸ், அம்பலாங்கொடை, K.K.S. TRANSPORT) அவர்களின் அன்பு மனைவியும் சரவணநாதன் (யாழ்ப்பாணம்), சரோஜா (கொழும்பு), ஜெகநாதன் (லண்டன்), வனஜா (கனடா), சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசொரூபி (றூபி - யாழ்ப்பாணம்), சிவானந்தன் (மத்திய வங்கி - கொழும்பு), நிவேதிகா (லண்டன்), மகேந்திரன் (மகம் - கனடா), பார்த்தினி (துசி - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சோதிராஜ் (யாழ். இந்துக் கல்லூரி), அமலராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜன் (லண்டன்), அஜாமினன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி-A/L 2006), சனாதனன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), நிதர்சன் (லண்டன்), சௌமியா (லண்டன்), ஜெனிசா (லண்டன்), அபிகரன் (கனடா), வாகினி (கனடா), சொபிதா (லண்டன்), விஷ்ணுகா (லண்டன்), திலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராஜா (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் - பிரான்ஸ்), காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் குலவீரசிங்கம் (லண்டன்), மகாதேவன் (யாழ்ப்பாணம்), சங்கரலிங்கம் (இந்தியா), முருகவேல் (யாழ்ப்பாணம்), கமலாம்பிகை (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 7360

தகவல்:
கு.சரவணநாதன் (மகன்).
(59701)

# அத்தியாவசியப் பொருள்களுடன் ஜால கப்பல் வந்து சேர்ந்தது!

யாழ்ப்பாணம்,ஏப் 16

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் 'ஜால' கப்பல் வந்துசேர்ந்தது.

யாழ்.மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்துக்கான பொருள்கள், யாழ். செயலகத்துக்கான அரிசி, சீனி, பருப்பு ஆகியவை உட்பட அத்தியாவசியப் பொருள்கள் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

தனியார் வர்த்தகர்களுக்கான ரயர், ரியூப், கட்டடப் பொருள்கள் வர்ணப் பூச்சு வகைகள் ஆகியனவும் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி இன்று ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)


**யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

கலை/வர்த்தக உயர் தர வகுப்புகள் ஆரம்பம்

க.பொ.த. (உ/த) வகுப்பில் கலை / வர்த்தகப் பிரிவுகளில் பயில விரும்பும் மாணவர்கள் தமக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள பாடசாலை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

- அதிபர்.

(59709)



## ZOA REFUGEE CARE
## VACANCY FOR PROGRAMME MANAGER – JAFFNA, SRI LANKA

**DESCRIPTION:**
ZOA is present in Sri Lanka since 1995, ZOA started to implement a relief & recovery programme for displaced and host population in North and East of Sri Lanka in 1995. ZOA Refugee Care Sri Lanka's Mission is to support refugees, internally displaced, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. Currently ZOA operates in the districts of Colombo, Anuradhapura, Mannar, Trincomalee, Ampara, Batticaloa, Kilinochchi and Jaffna.

**PROGRAMME MANAGER - JAFFNA**
**She / he will be responsible for:**
- Management of the ZOA organisation in the Jaffna programme.
- Assist with formulation and implementation of the Programme Plan. This includes relevant research, context analysis, assessment and participatory planning.
- Support Project Cycle management, including programme planning, project formulation, budgeting, monitoring and reporting.
- Help to maintain relationships with all relevant actors in programme area.
- Responsible for the management of programme staff in Jaffna.
- Supervision and control of the administrative and financial programme organization with the help of Head Office in Colombo.
- Participate in country-wide programme and knowledge development.
- Relevant security management responsibilities.
- Involve in any other responsibility as appropriate.

**Selection criteria include:**
- Previous work experience in humanitarian assistance in a senior position
- Knowledge of the humanitarian situation in the North and East
- Minimum professional education: university degree in a relevant discipline.
- Knowledge of and experience with project cycle management
- Experience in working in a team and people management.
- Fluent in English and preferably working knowledge of Tamil and Sinhala.
- Flexible and dynamic attitude.
- Excellent communication skills and ability to coach others.
- Ability to work in a multi-cultural and multi-religious setting.
- Experience in computer programs like Windows, MS Word, and Excel.

**Other remarks:-**
- The Programme Manager will be based in Jaffna with traveling to Colombo and east.
- Ability to understand the security risks associated with the location and operation.
- ZOA offers a competitive package compensate with the International NGO standards.

**Closing date:**
Applicants should submit their application on or before the 25th of April 2007. Short-listed candidates will be informed about the time and venue of the interviews. For further information on ZOA Refugee Care, please contact 4-513091.

**How to apply:**
Please forward your applications by enclosing your letter of motivation and Curriculum Vitae. Because of the number of applications we normally receive, only short listed candidates will be contacted.

Send details to – **address - 136/2, Isipathana Mawatha,Colombo 05, phone no - 4513091, fax - 4518827, email – hrm@zoasrilanka.org**
**Note: application should be sent by fax or E-mail address.**



**விற்பனைக்கு**

புதிய பிறிஜ், T.V., அல்சேசன் நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே.இல.
0776720788

**வீடு வாடகைக்குண்டு**

55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
க.ராதாகிருஷ்ணன்,
77, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

தொலைபேசி இணைப்பு, சிறிய டெலிக்கா வான், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
63, குருசோ வீதி,
சுண்டுக்குளி.
222 8171

**வீடு வாடகைக்கு**

இல. 63, குருசோ வீதியிலுள்ள சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
222 8171
(58706)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 ★ 09 ★ 1967 | 26 ★ 04 ★ 2006 |

## அமரர் தங்கராஜா கமலலோஜன் (கமல்)

(பாதுகாப்பு உத்தியோகத்தர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்)
*திதி: சதுர்த்தசி (16.04.2007)*

எமது குடும்பத்தில் வந்து சூரியன் போல் பிரகாசித்தீர்
நாமும் தாமரைபோல் மலர்ந்திருந்தோம்
வஞ்சமறியா நெஞ்சம் கொண்டவரே!
வஞ்சகத்தோர் நெஞ்சம் அறியாமலே
கமல் எனும் ஒளி மங்கியதால்
நாமும் வாடி வீழ்ந்தோம் ஆனாலும்
எம் உயிருள்ள வரை உம் நேசம் மட்டும்
எம்மைவிட்டுப் போகாது என்றும் எம்முடனே இருப்பீர்!

*26.04.2006 அன்று அகாலமரணமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு தங்கராஜா கமலலோஜன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி இன்று (16.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறவுள்ளது. அதில் உற்றார், நண்பர்கள் அனைவரையும் கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

என்றும் உம் நினைவில் தவிக்கும்:
அன்பு மனைவி, மாமா, மாமி,
மைத்துனர்மார், உடன்பிறவாச் சகோதரர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
மட்டுவில். (59960)

# ஈரவிழிகளுடன் ஐந்தாம் ஆண்டில்



| இன்பத்தின் நிறைவாய் | துயரத்தின் இமயமாய் |
|---|---|
| 19 ★ 04 ★ 1927 | 11 ★ 04 ★ 2002 |

## அமரர் வைரவநாதர் கந்தையா

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன் - வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை)
*திதி: சதுர்த்தசி (16.04.2007)*

உதிரத்தை உரமாக்கி உயர்வாக நாம்வாழ
உதிர்ந்த தியாகியே அப்பா! நோயிற் கிடவாமல்
நொந்துமனம் வாடி மின்னல் வேகத்தில்
சென்ற நீர் திடீரென மறைந்தது ஏனோ?
எத்தனை இரவுகள் விடிந்தாலும் நீர் இல்லா
விடிவுகள் பிடிக்கவில்லை அப்பா!
கனவில் வருகின்றீர் திடீரென மறைகின்றீர்
விடிந்தபின் கனவு என தவியாய் தவிக்கின்றோம்
கர்ச்சிக்கும் சிங்கமாய் கட்டளை இடும் தந்தையாய்
பூவே உன் புன்சிரிப்பு முகத்தை எப்போ காண்போம்
வேர்கள் இருந்தும் ஆணிவேர் அற்ற எம்மைச் சுற்றி
நடப்பவைகளை நீர் அறிவீர் படைத்தவரோடு மறைந்திருக்கும்
நீர் பெற்றெடுத்த சிங்கக் குட்டிகளையும்
கல்வி கற்க முடியாமல் திக்குதிசைமாறி சிதறிக்கிடக்கும்
உமது பேரக்குழந்தைகளையும் இனத்தவருடன்
கூடி வாழ கருணை மழை பொழிவீர் ஆகா! ஓ
எம் அப்பா! எம் தியாகியே! தெய்வமே!
நீர் எங்கிருந்தாலும் அங்கு அமைதி கண்டு சாந்தி பெற்று
எம்மையும் இப்பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டி
விநாயகப்பெருமான் திருவடியில் இன்று ஈர விழிகளுடன் வேண்டுகின்றேன்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

உமது கடைக்குட்டி.


**தவறிவிட்டது**

நாவற்காடு, அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட மாரிமுத்து தனவதி ஆகிய எனது அடையாள அட்டை (628604924V - கரந்தன் நீர்வேலி) ஏப்ரல் 5ஆம் திகதி அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். *அச்சுவேலி மினிபஸ் சங்க அலுவலகம் பஸ்நிலையம் - அச்சுவேலி.*

**தவறிவிட்டது**

சேனநாயக்க மாவத்தை இரத்தினபுரியைச் சேர்ந்த சந்தனம் செல்வராணி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.728410264V) யாழ். மையப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விஜயா கூல் பார் (முரளி), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவும். (59707)

**தவறிவிட்டது**

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த நிலுஜா சிவானந்தம் என்பவருடைய தே.அ. அட்டை (857343034V), இராணுவ அ.அட்டை (0903033384) என்பன கடந்த 11.04.2007 தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவும். (59704)

**பெயர் மாற்றம்**

மாதகல் வடக்கு, மாதகல் என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா அருணாசலம் ஆகிய நான் 06.08.2006 முதல் எனது பெயரை **கந்தையா கந்தசாமி** என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை அறியத்தருவதுடன், இனிவரும் காலங்களில் இப்பெயரையே பாவிப்பேன் என்றும் இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**கந்தையா கந்தசாமி**
மாதகல் வடக்கு, மாதகல்.
(58680)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே.: 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## மனித உரிமை மீறல்களை விசாரிக்க சர்வதேச ஆணைக்குழு அவசியம்

இலங்கையில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்திலிருந்து தொடர்ந்து குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

இப்போது குரல் எழுப்பியிருப்பவர் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப்பிராந்தியங்களுக்குப் பொறுப்பான வெளிவிவகாரத் துணை அமைச்சகத் தூதுவர் ரிச்சர்ட் பௌச்சர் ஆவார்.

இலங்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் குறித்து கண்காணிப்பதற்கும் விசாரிப்பதற்கும் சர்வதேச விசாரணை ஆணைக்குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைக்கு அமெரிக்காவின் முழு ஆதரவை ரிச்சர்ட் பௌச்சர் வெளியிட்டிருக்கின்றார்.

சட்ட ரீதியான, இறைமையுள்ள அரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசு, தனதுகட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அசிரத்தையாக நடந்துவருகின்றது என்றும், இவ்விடயங்கள் குறித்து நீதி விசாரணைகளை முழு முனைப்போடு நடத்தி குற்றமிழைத்தவர்களை சட்டத்தினால் தண்டிக்கும் நடைமுறையில் அரசு இதயசுத்தியோடு ஈடுபடவில்லை என்றும் சர்வதேச மட்டம் வரை கருத்துப் பரவியிருக்கின்றது. அதுவுமல்லாமல் இத்தகைய மோசமான சம்பவங்களின் பின்னணியில் அரசுத் தலைமையின் நேரடிப்பங்குபற்றுதல் உண்டு என்று மனித உரிமை ஆர்வலர்கள் தரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பியிருக்கின்றது.

இதனால்தான், இத்தகைய சம்பவங்கள் தொடர்பான அரசின் நீதி, விசாரணை நடவடிக்கைகளை உதாசீனப்படுத்திவிட்டு, சர்வதேச கண்காணிப்புக்கும் விசாரணைக்குமான ஆணைக்குழுக்களை இவ்விடயத்தில் ஈடுபடுத்துவது தொடர்பான வற்புறுத்தல் சர்வதேச சமூகத்திடமிருந்து இப்போது கிளம்பியிருக்கின்றது.

மஹிந்தரின் அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் மோசமாக - கொடூரமாக - கோரமாக - இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பாக அவரது அரசின் விசாரணை நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்புகள் என்பது முழு உலகுக்கும் இப்போது அம்பலமாகி வருவதும் கவனிக்கத்தக்கது.

இந்த அராஜகங்களினால் பாதிப்புற்றோர், இவ் விவகாரங்கள் தொடர்பாக மஹிந்தரின் அரசினால் முன்னெடுக்கப்படும் நீதி விசாரணைகளை நியாயமானவை என நம்புவதற்குத் தயாரில்லை.

இதன் காரணத்தாலேயே, இந்த மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக்குழு நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவும் முன்வைத்திருக்கின்றது.

இலங்கையில் ஆட்கள் கடத்தப்படுதல், அச்சுறுத்திக் கப்பம் அறவிடுதல், காணாமற் போகச் செய்தல் போன்ற கொடூரக் குற்றங்கள் மலிந்துள்ளன. இவற்றின் பின்னணியில் அரசுப்படைகளும் அவற்றுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகளும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. இக்குற்றங்களை - மனித உரிமை மீறல்களை - அவை இழைப்பதற்கு அரசுத் தலைமையின் முழு ஆசீர்வாதமும் அவற்றுக்குஉண்டு என்ற திடுக்கிடும் தகவலும் வெளியாகி இருக்கின்றது.

அதனால்தான் இவ்விவகாரம் குறித்து ஆழ ஊடுருவி விசாரித்து உண்மையை அம்பலப்படுத்த சர்வதேச விசாரணைக்குழு அவசியம் என்கின்றது இவ்விடயத்தில் மக்களின் விழிப்புணர்வை முழு அளவில் பிரயோகிக்கப் பங்காற்றி வரும் மக்கள் கண்காணிப்புக் குழு.

இந்த அராஜகங்களுக்கு அரசு மீதே குற்றம் சுமத்தப்படுகின்றது. அரசின் சில பிரிவுகளுக்கு இக்குற்றங்களுடன் நேரடிச் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. அதனால்தான் இந்த ஆட்கடத்தல்கள், காணாமற் போதல்கள், அச்சுறுத்திக் கப்பம் அறவிடல் போன்ற சமூகவிரோதச் செயல்களை எந்த இடர்ப்பாடுமின்றி, தங்குதடையுமின்றி, சட்டத்தின் கட்டுப்பாடுகளின்றி சர்வ சாதாரணமாக சம்பந்தப்பட்ட தரப்புகளால் முன்னெடுக்க முடிகின்றது என்றும் சுட்டிக்காட்டுகின்றது மக்கள் கண்காணிப்புக்குழு.

இந்தப் பின்னணியில் இந்த மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக அரசுக்கட்டமைப்பே புலனாய்வு நடத்தி, நீதி விசாரணை மேற்கொண்டு, தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனையை வாங்கிக் கொடுக்கும் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது; அபத்தமானது; நம்மை நாமே ஏமாற்றும் ஏற்பாடாகவே அது அமையும் என்றும் மக்கள் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் குற்றங்கள் குறித்து அரசின் நீதி விசாரணை மூலம் குற்றமிழைத்தோர் தண்டிக்கப்படுவர் என்றோ, இனிமேல் அத்தகைய குற்றங்கள் இழைக்கப்படாமல் தடுப்பதற்கான கடும் நிலைப்பாட்டை அத்தகைய விசாரணைகள் உருவாக்கும் என்றோ பார்த்திருப்பதில் அர்த்தமில்லை. அந்நிலைமை உணரப்பட்டதன் காரணத்தினாலேயே சர்வதேச விசாரணைக்குழுவை அழைக்கும் கோரிக்கை வலுப்பெற்றிருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கும் அதன் தலைமைக்கும் எதிராக மெல்ல மெல்ல இறுகிவரும் சர்வதேச சுருக்குக்கயிற்றின் தாக்கம், விளைவு, அழுத்தம் ஆகியன குறித்தும் அவற்றின் பெறுபேறு குறித்தும் இலங்கை அரசுத் தரப்பு இன்னும் சரிவர உய்த்துணரவில்லை என்றே தோன்றுகின்றது. இவ்விடயத்தில் அது காட்டிவரும் அசிரத்தை அதையே நமக்கு உணர்த்துகின்றன.

மோசமான மனித உரிமை மீறல்களை சர்வ சாதாரணமாக அனுமதிப்பதன் மூலம், இப்போது விதைக்கின்ற வினையைப் பின்னர் விளைவாகத் தானே அறுக்கும்போதுதான் அதன் நோவு அரசுக்கும் புரியும்.

# பேச்சை ஆரம்பிக்கும் சாத்தியங்கள் இல்லை.

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு

கொழும்பு, ஏப். 16

''இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புதிதாக எந்த முயற்சிகளும் ஆரம்பிக்கப்படவில்லை'' என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

''புதிதாக இங்கு ஒன்றும் இல்லை. கடந்தவாரம் விடுதலைப் புலிகளை நாம் சந்தித்தபோது புதிய அணுகுமுறைகளோ அல்லது புதிய திட்டங்களோ விவாதிக்கப்படவில்லை. அது ஒரு வழமையான சந்திப்பு'' என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் கண்காணிப்புக் குழுவினர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்த போது மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்று செய்திகள் வெளியாகியிருந்தன. அதற்கு அரசும் பேச்சுகளில் ஈடுபட விரும்புவதாக தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தது.

''நாம் கண்காணிப்புக் குழுவினருடன் ஓர் வழமையான சந்திப்பையே மேற்கொண்டிருந்தோம். நோர்வேயோஅல்லது வேறு தரப்பினரோ பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய புதிய முயற்சிகள் தொடர்பாக எம்மை அணுகவில்லை'' என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

(சி)

## கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூடைப்பந்தாட்ட ஆடுகளங்களில் மத்தியஸ்தர்களாகப் பணியாற்றுவதற்கு இலங்கை கூடைப் பந்தாட்ட சம்மேளனத்தால் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஜி.எஸ்.சாந்திகரன், எவ்.ரி. அல்பிறட், கே.கணேசநாதன், ஜி.டி.மதியழகன், ஏ.எஸ். டிலான், பி.ஈ.ஹென்றி, பி.குகராஜ் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அறிவித்துள்ளது. (203)

## எரிபொருளைக் கொள்கலன்களில் வழங்க மறுப்பதால் பாவனையாளர்கள் பாதிப்பு

கரவெட்டி, ஏப்.16

கொள்கலன்களில் பெற்றோல் விநியோகிக்க வேண்டாம் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய நடைமுறையால் வாகன உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிய ரக மோட்டார் சைக்கிள்களில் - ரி.வி.எஸ்., ஷாளி, சுப்பர்கப் ஆகிய வாகன ரகங்களின் கொள்கலன்களில் குறைந்த அளவிலான பெற்றோலே பெறமுடியும். தற்போது வழங்கப்படும் பெற்றோலை முழுமையாகக் கொள்வனவு செய்ய ஒரு தடவை வழங்கப்படும் பெற்றோலைப் பெறும் பொருட்டு இரு தடவைகள் எரிபொருள் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

வாகன உரிமையாளர்கள் பங்கீட்டுக்கு வழங்கப்படும் எரிபொருள்களைத் தமது வாகன கொள்கலனில் நிரப்பி மீதியானவற்றை கொள்கலன்களில் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-70-202)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.16

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி மாலை தெப்பத் திருவிழாவும் அடுத்தமாதம் முதலாம் திகதி சப்பரத் திருவிழாவும் நடைபெறும். மே மாதம் இரண்டாம் திகதி தேர்த்திருவிழாவும் மூன்றாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * *

சுழிபுரம்,ஏப்.16

சங்கானை அரசடி ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கிரியைகள் 26ஆம் திகதி ஆரம்பமாகி 29ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

* * *

சங்கானை,ஏப்.16

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்மாகவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203-28-29)

## சீமெந்து கிடைத்தும் மணல் இல்லாததால் கட்டடப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன

### சண்டிலிப்பாய் பகுதியில் இந்த நிலைமை

வலி.தென்மேற்கு, ஏப்.16

வலி.தென்மேற்குப் பகுதியில் வீடமைப்புத் திட்டப் பயனாளிகளின் கட்டட வேலைகளைச் செய்வதற்குச் சிமெந்து கிடைத்துள்ளது. ஆயினும் தரமான மணல் கிடைக்காததால் குறிப்பிட்ட கட்டடப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்திற்கு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அண்மையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட சிமெந்தை விநியோகம் செய்து வருகின்றது.

உலக வங்கியினதும் மற்றும் நிறுவனங்களினதும் வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளால் கட்டப்பட்ட வீடுகளின் குறை வேலைகளுக்கும், ஆலய புனருத்தாரண கட்டடப் பணிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் ஒரு பைக்கற் சிமெந்து ஆயிரத்து 200 ரூபா வீதம் கடந்த வாரத்தில் விநியோகம் செய்யப்பட்டது.

எனினும்தரமான மணல்கிடைக்காததால் அந்தப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பிரதேசத்திலும் சிமெந்து கிடைத்தும் தரமான மணல் இல்லாததால் வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் பாதிக்கப்பட்டது குறித்த செய்தி ஏற்கனவே உதயனில் வெளியானது. (அ-1-135)

## ஆசிரியர் கலாசாலைக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அச்சுவேலி, ஏப்.16

ஆசிரியர் கலாசாலைகளில் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப இறுதித் தினத்தில் 3 மாத ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் தாம் நியமனம் பெற்ற பாடத்துறைகளில் பயிற்சிபெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆங்கிலபாட பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் தமது விண்ணப்பங்களை பிரதம ஆணையாளர், ஆசிரிய கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு, பத்தரமுல்ல என்ற முகவரிக்கும் -

ஏனைய பாடநெறிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் பிராந்திய ரீதியில் அறிவிக்கப்பட்டுள்ள முகவரிக்கும் - விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆங்கில பாடநெறி தவிர்ந்த ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ஆசிரியர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் -

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் மட்டக்களப்பு ஆசிரிய கலா சாலைக்கும் - தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை ஏப்ரல் 6 ஆம் திகதிய வர்த்தக மானியில் பார்வையிடலாம். (202-11)

## செய்மதிகளை தவறாகப் பயன்படுத்தவில்லை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுப்பு

சர்வதேச நாடுகளில் தமது ஒளிபரப்புக்களை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வர்த்தக செய்மதிகளை தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

'நாம் சட்டபூர்வமாகவே அவற்றைப் பயன்படுத்துகின்றோம், திருட்டுத்தனமாக அல்ல' என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

உலகின் பெரிய வர்த்தக செய்மதி நிறுவனமான 'இன்ரல்சற்'றின் பேச்சாளர், விடுதலைப் புலிகள் தமது ஒரு செய்மதியை தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவித்திருந்தார்.

யூரோப் ஸ்ரார் 1 என்னும் செய்மதியைபயன்படுத்தி சிறிலங்காவின் வடக்குப் பகுதியில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் இருந்து ஆசியாவின் சில பகுதிகளுக்கு தமது தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை விரிவுபடுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகள் கடந்த 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிவித்திருந்தனர். ஆனால் யூரோப் ஸ்ரார் 1 என்னும் செய்மதி பின்னர் இன்ரல்சற் 12 அல்லது ஐ.எஸ்12 என பெயர் மாற்றப்பட்டிருந்தது. எனினும் விடுதலைப் புலிகள் தமது சொந்த[illegible] செய்மதியூடான ஒளிபரப்புக்களை நடத்தி வருகின்றனரா அல்லது தமக்கு வேண்டியவர்களின் ஊடாக நடத்துகின்றனரா என்பது தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் தமது சேவை வழங்குநர் தொடர்பாக தகவல்களை வழங்க மறுப்பதுடன், தாம் சட்டத்திற்கு முரணாக எதுவும் செய்யவில்லை எனத் தெரிவித்துள்ளனர் என்று 'இன்ரல்சற்' பேச்சாளர் கூறியிருந்தார்.

இது தொடர்பாக தாம் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரக அதிகாரியை தொடர்பு கொள்ளப் போவதாக 'இன்ரல்சற்' நிறுவனம் மேலும் தெரிவித்தது. (சி)

## தராசுகளுக்கு முத்திரை

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களின் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதிவரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து முத்திரையிடப் படவுள்ளன. (1-202)

## நாளை

சித்திரை - 04
செவ்வாய்க்கிழமை
17.04.2007
திதி: அமாவாசை
மாலை: 05.39
நட்சத்திரம்: ரேவதி
பிற்பகல் : 12.15
[illegible] : 10.34 - 12.04
[illegible] : 03.04 - 04.34

## வாசகர் திருமுகம்

### விலைகள் - அப்போதும், இப்போதும்

*கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி குடாநாட்டிற்கான தரை வழிப்பாதை மூடப்பட்டதை அடுத்து சகல பொருள்களும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு ப.நோ.கூ.சங்கங்கள், வர்த்தக கைத்தொழில் மன்றம், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றினூடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.*

*இவ்வாறு எடுத்துவரப்பட்ட பொருள்கள் எல்லாம் அவற்றில் பொறிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்கச் சற்றுக் கூடுதலான விலைக்கே விற்பனை செய்யப்பட்டன. (உதாரணம்: ரூபா 163.50 விலை பொறிக்கப்பட்ட 'அங்கர்' பால்மா 167 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.)*

*கப்பல் கட்டணம் காரணமாகவே இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் என்பதனை எவரும் உணர்ந்ததாக இல்லை. ஏன், இது குறித்து தமிழ் எம்.பிக்களும் கவலைப்படவில்லை.*

*இப்போது 'அங்கர்' பால்மா 163 ரூபாவுக்கு ப.நோ.கூ. சங்கங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. முன்பு பொருள் ஏற்றி வந்த அதே கப்பல்களிலேயே இப்போதும் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. ப.நோ.கூ.சங்கங்கள் 'அங்கரின்' விலையை நான்கு ரூபா குறைத்ததன் காரணம் என்ன?*

*கப்பல் கம்பனிகள் தமது கட்டணத்தைக் குறைத்து விட்டனவா? அல்லது ப.நோ.கூ.சங்கங்கள் அரச அதிபரின் தலையீட்டின்றி நேரடியாகக் கொள்வனவு செய்கின்றனவா? அல்லது மக்களின் நலன் கருதி கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு ரூபா நட்டத்தில் அங்கர் பால்மாவை விற்பனை செய்கின்றனவா? இப்போது 163 ரூபாவுக்கு அங்கர் விற்பனை செய்யப்படுவதை மக்கள் வரவேற் கிறார்கள். ஆனால் கடும் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் மட்டும் ஏன் 167 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. விடை தெரியாத கேள்விகள். இவற்றுக்கு யார் பதிலளிப்பார்கள்?*

*திருநெல்வேலி.* **நலன்விரும்பி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளுக்கு முன்னோடியாக நடந்துகொள்ள இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. 2002ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், தற்காலிக அந்தஸ்த்துடன் வாழும் இலங்கையர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் ஆரம்பித்தன.

அதன் பிரகாரம் இதுவரை கட்டம் கட்டமாக மேற்படி நாடுகளில் இருந்து நூற்றுக்கணக்கானோர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தை இடைநிறுத்துவது குறித்து சுவிற்ஸர்லாந்து இப்போது பரிசீலனை செய்வதாக அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து நாம் தீர்க்கமாக இன்னும் முடிவுசெய்யவில்லை. எனினும் இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து நாம் அக்கறையுடன் அவதானித்து வருகிறோம் - என்று வெளிநாட்டு அமைச்சின் அதிகாரி ஸ்ருசிங்கர் கூறினார். அகதிகள் விவகாரத்தைக் கையாளும் 'எவ்.ஓ.எம்' பிரிவின் உயர் அதிகாரிகள் இது குறித்து விரைவில் கூடி ஆராய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சுவிற்சர்லாந்து இலங்கை அதிகளை திருப்பி அனுப்புவதை இடைநிறுத்தும் பட்சத்தில் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளும் அதனைப் பின்பற்றலாம் என்று இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது. (அ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வுகூறப்படுவது போன்று சந்திரிகா நாடாளுமன்றம் வந்தால், அவருக்கு அங்கு வைத்துத் தக்க பாடம் புகட்ட முடியும் என்ற தொனியில் ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சி சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்படும்பட்சத்தில் அவரை ஐக்கிய தேசியக் கட்சி, தனது தேசியப் பட்டியல் எம்.பிக்களில் ஒருவராக நியமிக்கலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**ஜெயராசா மோகனதாஸ் (மோகன்)**

மலர்வு: 23.05.1988

உதிர்வு: 26.04.2006

உயிரிலும் மேலான உயிரே - எம்
ஆணிவேராய் இருந்த உன்னை
இறைவன் விரும்பி அழைத்தானோ?
நீ எம்மைப் பிரிந்து ஆண்டொன்று என்ன
ஓராயிரம் யுகங்கள் சென்றாலும்
நாம் உன்னை மறவோம்.

நிரந்தர முகவரி:
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
தற்காலிக முகவரி:
மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (59591)

தாய், தந்தை, சகோதரன், பேரன், பேர்த்தி, மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், உடன்பிறவாச் சகோதரர்கள்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 10 - 1946



இறப்பு 16 - 04 - 1997

**அமரர் கனகன் தங்கராசா**

(இ.போ.ச. நடத்துநர், பருத்தித்துறை)

ஆண்டுகள் பத்து ஆனாலும் ஆறவில்லை எம்மனம்
நித்தம் உங்களை எண்ணி வாழ்கின்றோம் - அனுதினமும்

வல்லை வீதி,
தொண்டைமானாறு. (59527)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

காலங்கள் மாறினாலும் தாத்தாவை மறப்போமா

தவப்பேறு 03 - 08 - 1931



சிவப்பேறு 26 - 04 - 2006

**அமரர் நாகலிங்கம் பரம்சோதி**

(ஆரம்பகால உப்புக் கூட்டத்தாபன உத்தியோகத்தரும், பறிஜின் டிசைன் குறூப் உரிமையாளரும்)

இருகரம் சேர்ந்துநல் ஓசையும் எழுவதும்
இருவழி சொந்தத்தில் இனிமையும் காண்பதும்
பெருவரமே! நேசமுடன் பண்புதனை பாசமுடனூட்டி
பெருநிலமும் மனையுடனே பசியாற கனிமரங்கள்
உருத்துடனே தந்தவெம் தாத்தாவின் நினைவாக
உங்களின் சொத்தினையே தொட்டு நிதம் மீட்டுகின்றோம்
கருத்துடன் தேவைகளை நிறைவாக்கி தந்தவரே!
காலங்கள் மாறினாலும் மறவாத உறவானவரே!

பறிஜின் டிசைன் குறூப்,
இல. 100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு. (59632)

பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள். (தர்மதா, மிதுண்பரிசித், நர்மதா, மேருஜன் பரதன்)

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களில் உள்ள மக்களின் நிலைமையைக் கண்டறிவதற்காக ஜயலத் எம்.பி. அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கூட்டங்களையும் நடத்த முடிவாகியுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு அப்பால், யுத்தம் காரணமாக உள்ளூரிலும் இந்தியாவிற்கும் இடம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகள் நிலை தொடர்பாகவும் இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது (அ-சி)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ளன. துணை இராணுவக் குழுக்களின் உதவியுடன் அரசு, எமது செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தியுள்ளது. எனவே, கிழக் கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை எம்மால் வழங்க முடியவில்லை.

தற்போது எமது அலுவலகங்கள் இருந்த இடங்களில் அரசாங்க படையினரும், துணை இராணுவக் குழுவினரும் நிலைகொண்டுள்ளனர். திருகோணமலை, வாகரைப் பகுதிகளில் உள்ள எமது அலுவலகங்கள் துணை இராணுவக் குழுவினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது சிறிலங்கா காவல்துறையினர் நிலைகொண்டுள்ளனர். இந்த அலுவலகங்களில் பணிபுரிந்த எமது பணியாளர்கள் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு விரட்டப்பட்டுள்ளனர்.

அரசின் துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் கொழும்பில் உள்ள எமது அலுவல கம் இயங்கி வருகின்றது. முடக்கப்பட்ட எமது வங்கிக் கணக்குகளை மீண்டும் பெறு வதற்கு நாம் நீதிமன்றம் ஊடாக நட வடிக்கை எடுத்து வருகிறோம். சிறிலங்கா அரசினதும், அரசின் நீதிமன்றங்களினதும் பெருமளவான தாமதங்களுக்கு மத்தியிலும் எமது நாள்கள் தற்போது நீதிமன்றில் செலவளிக்கப்படுகின்றன.

எமது கழகம் அனைத்துலக மற்றும் உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து கிழக்கில் துன்பப்படும் மக்களுக்கு சேவையாற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, கிழக்கில் இடம்பெயர்ந்து துன்பப்படும் மக்களுக்கு உதவ விரும்பும் மக்கள் எமது உள்ளூர் மற்றும் அனைத்துலக த.பு.க அலுவலகங்களின் ஊடாக உதவிகளை மேற்கொள்ளும்படி நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த காரியாலயங்கள் உலகம் எங்கும் பரந்துள்ளன. www.troonline.org என்னும் இணையத்தளத்தின் ஊடாக எமது தொடர்பாடல் முகவரிகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமரச முயற்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வரக்கூடும் என அமைதி முயற்சி களுக்கு உதவும் சர்வதேச ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

''அமைதி முயற்சிகள் விவகாரத்திலும் 2002ஆம் ஆண்டின் யுத்தநிறுத்த விடயத்திலும் இரண்டு தரப்புமே சமாதானம் குறித்து உதட்டளவில் பேசுவதோடு சரி.'' - என்று அமைதி முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேயின் பிரதிநிதி ஒருவர் கூறுகின்றார்.

''நோர்வேக்காரர்கள் ஆக ஓர் அனுசரணையாளர்களாகப் பங்குபற்றுவதோடு சரி. அதிலும்கூட இப்போது எந்த அனுசரணைப்பணிக்கும் அவர்கள் அழைக்கப் படுவதில்லை.''- என்று இராஜதந்திரி ஒரு வர் கூறினார்.

''அடுத்துவரும் மாதங்களில் பதிலுக்கு பதில் பழிவாங்கும் வன்முறைகள் மேலும் அதிகரித்துச் செல்வதை நாம் எதிர்பார்க்கலாம். அரசுப் படைகள் புலிகளின் பிரதேசங்களுக்குள் அவர்களைப் பின்தள்ளும் தாக்குதல்களிலும் விடுதலைப்புலிகள் நுட்பமான பெரும் தாக்குதல்களிலும் ஈடுபடக்கூடும்'' - என்று அந்த ராஜதந்திரி குறிப்பிட்டார்.

''சர்வதேச சமூகம் இப்போது உணர் வது இதைத்தான். விடுதலைப்புலிகளும் அரசுப் படைகளும் ஒருவரை மாறி ஒரு வர் இன்னு கொஞ்சம் அதிகமாக அடித்துக் கொள்ளட்டும். இப்படியே மோதுப்பட்டு அவர்கள் எப்போது களைத்துப் போகின்றார்களோ அப்போது இரு தரப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவர தங்களால் உதவமுடியும் என்று சர்வதேச சமூகம் எண்ணுகின்றது'' - இப்படி மற்றொரு ராஜதந்திரி குறிப்பிட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையை இன்னும் பேணிப் பராமரித்துவரும் போர் நிறுத் தக் கண்காணிப்புக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் விசனம் நிலவுகிறது. எனினும் அவர்கள் உறுதியாகவே இருக்கிறார்கள்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் பேச்சாளர் தொபினுர் ஓமர்சனின் கருத்துப்படி போர்நிறுத்த உடன்படிக்கை தற்போது கடதாசியில் மட்டுமே இருக்கிறது. எனினும் அது இன்னும் கண்காணிக்கப்பட்டே வருகிறது.

''துரதிர்ஷ்ட வசமாக உடன்படிக்கை அண்மைய மாதங்களாக அதிகளவில் மீறப்பட்டு வருகிறது. என்றாலும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகக் குறைந்தது களத்தில் என்ன நடக்கிறது என்பதை ஆவணப்படுத்தும் ஒரு சுயாதீன அலகாகவாவது தனது பங்களிப்பைச் செய்துவருகிறது'' - என்றார் அதன் பேச்சாளர்.

- இவ்வாறு ஏ. எப். பி. செய்தியில் தெரி விக்கப்பட்டிருக்கிறது. (சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவதாக, ஒரு ஜனநாயக நாடான சிறிலங்கா பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவது, விடுலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் சிறார் படைச்சேர்ப்பு, பேரூந்துகள் மீதான குண்டு வெடிப் புக்கள் என்பனவாகும்.

இரண்டாவதாக, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு உண்மையான விசாரணைகளை நடத்த வேண்டும். சிறிலங்காவின் நீதித்துறையினரால் தெளிவான முறையில் நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளுக்கும், அதற்கு உறுதுணையாக அனைத்துலக விசாரணை ஆணைக்குழுவை அமைப்பதற்கும் அமெரிக்கா ஆதரவு வழங்கும். சிறிலங்காவில் இடம்பெறும் முழு அளவிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் நாம் கவனத்தை செலுத்தியுள்ளோம். எம்மால் அவதானிக்கப்படும் கடுமையான நிலைமைகள் தொடர்பாக நாம் அக்கறை கொண்டுள்ளோம். (சி)

## சேவை நலன் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்

உயர்திரு.

**அருணாசலம் தம்பு கதிரவேல்**


(முகாமையாளர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை)



முகாமையாளராக அரும்பணியாற்றி, வங்கிப் பணிதனில் 38 வருடங்களைப் பூர்த்திசெய்து, இன்று (16.04.2007) அறுபதாவது அகவையில் இளைப்பாறும் இவருக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவர் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என காளி அம்பாளை வேண்டுகின்றோம். (59714)

வாழ்த்துவோர்:
உடுவில் ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர்.

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



**நாகநாதர் கணபதிப்பிள்ளை குமாரசூரியர்**

(சமாதான நீதிவான், அஞ்சலதிபர் - நயினாதீவு - 16.04.2007)

நயினாதீவு அஞ்சலகத்தில் பொறுப்பு அஞ்சலதிபராகத் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் பெரும்பணியாற்றி 16.04.2007இல் ஓய்வு பெறுவதோடு, இன்று தனது 60 ஆவது அகவையில் காலடி பதிக்கும் நன்னாளில் அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டுவதோடு, அவர்தம் குடும்பத்தினரோடு வளமான எதிர்கால வாழ்வில் திளைக்க எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர்,
யாழ்ப்பாணம். (59713)

கோபாலபிள்ளை - ஜெயந்தா
குடும்பத்தினர்.

## மதிப்பளித்தல் நிகழ்வு

காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தவிருக்கும் மதிப்பளித்தல் நிகழ்வு தொடர்பாக கீழ்வரும் தகைமையுடைய மாணவர்கள் 2007.04.21ஆம் திகதிக்கு முன்னர் கேட்கப் பெறும் விவரத்தினை கழக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகைமை**

1) 2006இல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்
2) 2006இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர்
3) காரைநகர் பிரதேசத்தில் நிரந்தரமாக வதிபவர்கள்

முழுப்பெயர், முகவரி, பாடசாலை, பெற்றபுள்ளிகள், பல்கலைக்கழகம், பாடநெறி, உறுதிப்படுத்தும் சான்று

காரை மத்தி மேம்பாட்டுக் கழகம்,
காரை மத்தி, காரைநகர். (59604)

## மரண அறிவித்தல்

### திருமதி குழந்தைவேலு மீனாம்பிகை



நவாலியைச் சேர்ந்த குழந்தைவேலு மீனாம்பிகை நேற்றுமுன்தினம் 14.04.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கதிரவேலு குழந்தைவேலு (முன்னாள் அதிபர், விவேகானந்த வித்தியாசாலை) அவர்களின் மனைவியும் குலரட்ணம், குலேந்திரன், வித்யா (அமெரிக்கா), ரவீந்திரன் (இத்தாலி), கங்கா, யமுனா, சித்திரா (கனடா) றூபேந்திரன் (கொட்டாஞ்சேனை, கொழும்பு), உஷா, கலா (நவாலி) ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற அதிஷ்டரட்ணம் மற்றும் மரியாம்பிள்ளை, அனுஷியா, கிருஷ்ணலீலா, ஆன் மற்றில்டா, பிரபாகரன், ஜெயக்குமார், ராஜேந்திரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2007) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகேசன் றோட்,
நவாலி, மானிப்பாய். (59650)

தகவல்:
பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) ... நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org